பதவிகள் - வெற்றிடம்

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

வெளி வளவாளர்களின் வருகை போதனாசிரியர்களாக பதிவு செய்தல் - கல்வி ஆண்டு 2027

01. தொழில்நுட்பவியல் / தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் கீழ் 2027ம் கல்வி ஆண்டுக்காக தொடங்கப்படவுள்ள தொழிற் கல்விப் பாடநெறிகளுக்கான கல்விசார் நடவடிக்கைகளை மேற்கொள்ள வெளி வளவாளர்களை வருகை போதனாசிரியர்களாக பதிவு செய்வதற்காக இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுக் காட்டப்பட்டுள்ள தொழில்நுட்பவியல் / தொழில்நுட்பக் கல்லூரிகளின் பணிப்பாளர் / அதிபர்களினால் விண்ணப்பங்கள் இணையவழி முறையில் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும் வெளி விரிவுரையாளர்கள் விண்ணப்பங்கள் திணைக்களத்தின் இணையதளத்தின் www.dtet.lk என்ற இணையதளத்திற்குச் சென்று விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம் வெளி ஆலோசகர் பணிக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2026.12.07ம் திகதியாகும்.

02. வெளிவாரி போதனாசிரியர்களாக பணியமர்த்தப்படுவதற்கு தேவையான கல்வி மற்றும் தொழில் முறை தகமைகள்:-

I. வெளிவாரி விரிவுரையாளர்கள் பொதுச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளுக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு செய்யப்படும். அதன்படி அந்தந்த பாடப்பிரிவுகள் தொடர்பான அனைத்து விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு முன் குறித்த பாடநெறிக்கு பொருத்தமான துறைகளில் அவர்களின் கல்வி மற்றும் தொழில் முறை தகமைகளை பின்வருமாறு பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

II. NVQ மட்டம் 3 / 4 பாடநெறிகளில் கற்பித்தல் அல்லது பயிற்சி வழங்கும் விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய கல்வி மற்றும் தொழில் முறை தகுதிகளாக.

(a) பாடப் பகுதியில் NCT அல்லது NVQ மட்டம் 5 அதற்கு இணையான (சமமான) தகமைகள் அல்லது சம்பந்தப்பட்ட தொடர்புடைய பாடத்தில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் சான்றிதழ் அத்துடன் /தொடர்புடைய பாடத்தில் கற்பித்தல் / தொழிற் துறையில் குறைந்தபட்சம் 03 வருடம் அனுபவம்.

(b) பாடப் பகுதியில் NVQ – 6 மட்டம் சமமான தகுதியுடன் தொடர்புடைய பாடத்தில் குறைந்தபட்சம் 03 வருடம் கற்பித்தல்/ தொழில் அனுபவம் (உதாரணம்:- HNDE/ NDT/ NDES சம்பந்தப்பட்ட துறையில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட வேறு தகைமைகள்)

(c) சம்பந்தப்பட்ட துறையில் பட்டதாரி /பட்டப்பின் டிப்ளோமா அல்லது தொடர்புடைய துறையில் அதற்கு சமமான தொழில் முறை தகுதி அத்துடன் தொடர்புடைய பாடத்தில் கற்பித்தல் /தொழிற் துறையில் குறைந்தபட்சம் 03 வருடம்அனுபவம்.

III. NVQ மட்டம் 5 பாடநெறிகளில் கற்பித்தல் அல்லது பயிற்சியை வழங்கும் விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய கல்வி மற்றும் தொழில் முறை தகுதிகளாக.

(a) NVQ பாடப் பகுதியில் மட்டம் 5 அத்துடன் சம்பந்தப்பட்ட தொடர்புடைய பாடத்தில் கற்பித்தல் அல்லது தொழில் துறையில் குறைந்தபட்சம் 03 வருடம் அனுபவம் அல்லது NVQ உடன் 10வருட கற்பித்தல் / தொழில்துறையில் அனுபவம். மேலும் (முதலாவது அரையாண்டு (முதல் ஆண்டு) மற்றும் இரண்டாவது அரையாண்டு (இரண்டாம் ஆண்டு) கற்பித்தல் நோக்கங்களுக்காக மட்டும்)

(b) பாடப் பகுதியில் NVQ – 6மட்டம் சமமான தகுதியுடன் தொடர்புடைய பாடத்தில் குறைந்தபட்சம் 03 வருடம் கற்பித்தல்/ தொழில் அனுபவம் (உதாரணம்:- HNDE/ NDT/ NDES சம்பந்தப்பட்ட துறையில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட வேறு தகைமைகள்)

(c) சம்பந்தப்பட்ட துறையில் பட்டதாரி / பட்டப்பின் டிப்ளோமா அல்லது தொடர்புடைய துறையில் அதற்கு சமமான தொழில்துறை தகுதியுடன் தொடர்புடைய பாடத்தில் கற்பித்தல் / தொழிற் துறையில் குறைந்தபட்சம் 03 வருடம் அனுபவம்.

(d) சம்பந்தப்பட்ட துறையில் முதுமாணி பட்டம் அல்லது கலாநிதிப் பட்டம் அல்லது தொடர்புடைய துறையில் அதற்கு சமமான தொழில்துறையில் தகுதியுடன் தொடர்புடைய பாடத்தில் கற்பித்தல் / தொழிற் துறையில் குறைந்தபட்சம் 03 வருடம் அனுபவம்.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

iv. NVQ மட்டம் 6 பாடநெறிகளில் கற்பித்தல் அல்லது பயிற்சியை வழங்கும் விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய கல்வி மற்றும் தொழில் முறை தகுதிகளாக.

(a) சம்பந்தப்பட்ட துறையில் பட்டதாரி/பட்டப்பின் டிப்ளோமா அல்லது தொடர்புடைய துறைசார் தகமை அத்துடன் தொடர்புடைய பாடத்தில் கற்பித்தல் / தொழிற் துறையில் குறைந்தபட்சம் 03 வருடம் அனுபவம்.

(b) சம்பந்தப்பட்ட துறையில் முதுமாணி பட்டம் அல்லது கலாநிதிப் பட்டம் அல்லது தொடர்புடைய துறையில் அதற்கு சமமான தொழில்துறையில் தகுதியுடன் கற்பித்தல் / தொழில் துறையில் குறைந்தபட்சம் 03 வருடம் அனுபவம்.

03. **கொடுப்பனவு செலுத்துதல்**

வெளிவாரி வளவாளர்களுக்கு செய்யப்படும் கொடுப்பனவு அவர்களது கல்வித் தகைமைகள் மற்றும் தொழில் முறை அனுபவங்கள் மற்றும் அவர்கள் கற்பிக்கும் பாடநெறிகளின் NVQ மட்டம் என்பவற்றிற்கமைய பணிப்பாளர் நாயகத்தின் வெளிவாரி போதனாசிரியர்களுக்கு வழங்கப்படும் கட்டணங்களின் சுற்றறிக்கையின் அடிப்படைக்கு இணங்க வழங்கப்படுகின்றன.

04. **விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் முறை**

அரசாங்க சேவையிலுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை இணையவழியில் சமர்ப்பித்த பிற அதன் ஒரு நகலை பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். வெளிவாரி வளவாளர்களை தேர்தெக்கப்பட்டடால் விண்ணப்பத்தின் நகல் ஒன்றையும் அத்துடன் தொழில்நுட்பவியல் தொழில்நுட்பக் கல்வி கல்லூரியில் வெளிப்புற பயிற்றுவிப்பாளராக பணியாற்றுவது விண்ணப்பதாரரின் அலுவலக கடமைகளுக்கு எந்தவித இடையூறும் ஏற்படுத்தாது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் அந்தந்த நிறுவன தலைவரின் பரிந்துரைக் கடிதத்தையும் நேர்முகப் பரீட்சை குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

05. **தெரிவு செய்தல்**

a. தொடர்புடைய தொழில்நுட்பவியல் /தொழில்நுட்பக் கல்லூரியின் பணிப்பாளரினால் /அதிபரினால் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட பிறகு வெளிப்புற வள நபர்களாக பதிவு செய்வதற்கான தெரிவு செய்யப்பட்டு 2027ம் ஆண்டுக்கான வெளிவாரி வளவாளர்களாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தொடர்புடைய பாடங்களை கற்பிப்பதில் அனுபவம் உள்ளவர்களுக்கு நேர்முகப்பரீட்சை தேர்வில் முன்னுரிமை அடிப்படையில் அளிக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட போதனாசிரியர்களுக்கு வெளிப்புற ஆலோசகர்களை நியமிப்பது, சட்டத்தால் தண்டிக்கப்பட்ட நபராக இருந்தால் வழங்கப்படும் கல்வியின் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. தொழில் முறை சான்றிதழ்கள் போலியானவை எனக் கண்டறியப்பட்டால் / அந்த நபர் சமூக விரோத செயல்களில் ஈடுபடுவது கண்டறியப்பட்டால்/ கற்பித்தல் திருப்திகரமாக இல்லாவிட்டால் மாணவர் புகார்கள் பெறப்பட்டால், கல்லூரியின் தேவைகளைக் கருத்திற் கொண்டு எழுத்து மூலம் உரிய காரணத்தை தெரிவித்து கூறிய பிறகு,பணிப்பாளரினால் / அதிபரினால் எந்த நேரத்திலும் பாடத்திட்டத்தை இடைநிறுத்த முடியும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

b. தேவையான அடிப்படை கல்வி மற்றும் தொழில்முறைத் தகுதிகளைக் கொண்ட 65 வயதுக்கு உட்பட்ட விண்ணப்பதாரர்கள் யாரும் இல்லாத பட்சத்தில் மட்மே 65 வயதுக்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் வெளிவாரி போதனாசிரியர்களாக பணியமர்த்தப்படுவதற்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

c. வெளிவாரி வளவாளர்களாக விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களில் தங்கள் முந்தைய ஆண்டில் தங்கள் தொழில்நுட்பவியல் / தொழில்நுட்பக் கல்லூரிகளில் வருகை போதனாசிரியர்கள் பணிபுரிந்தவர்களுக்கு திணைக்களத்திலோ அல்லது கல்லூரியின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் ஒழுக்கம் அற்ற செயல்களில் ஈடுபட்டவர்கள் இருந்தால் அவ் வளவாளரை சூழ்நிலையினை பொறுத்து கல்லூரியின் பணிப்பாளரினால் / அதிபரினால் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்காமலேயே விண்ணப்பத்தை திரும்ப பெறவோ அல்லது நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கவும் முடிவு செய்யலாம்.

d. வெளிவாரி வளவாளர்களாகப் பதிவு செய்யும் போதனாசிரியர்கள் தாங்கள் கற்பிக்கும் தொழில்நுட்பவியல் / தொழில் நுட்பக் கல்லூரிகளின் அனைத்து தேர்வு நடவடிக்கைகளில் அதாவது பாடநெறி முடிவு / ஆண்டு இறுதி /அரையாண்டு தேர்வு பரிட்சைகளுக்குத் தேவைப்படும் போது பரிட்சை வினாத் தாள்களை தயாரித்து விசேட கட்டணம் செலுத்தியோ அல்லது செலுத்தாமலோ பரிட்சைகளை நடாத்துதல் விடைத் தாள்களை சரிபார்த்தல் போன்றவற்றைச் செய்வது கட்டாயமாகும்.

6. இந்தப் பதிவு நடவடிக்கையானது, 2027ஆம் கல்வி ஆண்டிற்கு மட்டுமே உரியதாகும் என்பதுடன், எந்தவொரு நிரந்தரப் பதவியைப் பெற்றுக்கொள்வதற்கும் உரித்துடையதல்ல.

7. வெற்றிட இடங்களுக்கு பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத சூழலில் தேவையான தகுதிகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் யாரும் விண்ணப்பிக்காத நிலையில் அல்லது ஆண்டின் இடைப்பகுதியில்

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

ஏதேனும் ஒரு பாடத்திட்டத்தில் பயிற்றுவிப்பாளருக்கான வெற்றிடங்கள் ஏற்படும் பட்சத்தில் வித்தியாலயத்தின் (நிறுவனத்தின்) பணிப்பாளர்/ அதிபர் மீண்டும் இணையவழியில் விண்ணப்பங்களைக் கோருவதன் மூலமும் நேர்முகப்பரீட்சை நடாத்துவதன் மூலமும் வெளிப்பயிற்றுவிப்பாளர்களை நியமிக்கும் அதிகாரம் பெற்றுள்ளார்.

08. சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் வர்த்தகமானிகளுக்கு இடையிலான வேறுபாடு இருந்தால் சிங்கள வர்த்தமானி கவனத்தில் கொள்ளப்படுகின்றது.

டி. வத்சலா மாரம்பகே,
பணிப்பாளர் நாயகம்.

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்.
த. பெ. இல. 557,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.
www.dtet.gov.lk

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

தொழில்நுட்பவியல் கல்லூரிகளின் / தொழில்நுட்பக் கல்லூரிகளின் பெயர்ப் பட்டியல்

தொடர் இல.	*தொழில்நுட்பவியல் கல்லூரிகள் /தொழில்நுட்பக் கல்லூரிகள்*	*விலாசம்*	*தொலைபேசி இலக்கம்*	*மாவட்டம்*
01	அம்பாறை ஹாடி தொழில் நுட்பவியல் கல்லூரி	இங்கினியாகல வீதி, அம்பாறை	063-2223485 063-2224236	அம்பாறை
02	அநுராதபுரம் தொழில் நுட்பவியல் கல்லூரி	கல்லூரி மாவத்தை, அநுராதபுரம்	025-2222690 0 25-2224710	அநுராதபுரம்
03	பதுளை தொழில்நுட்பவியல் கல்லூரி	கிறீன்லேண் டிரைவ், பதுலுபிட்டிய, பதுளை.	055-2222413 055-2230550 055-2220413	பதுளை
04	காலி தொழில்நுட்பவியல் கல்லூரி	களுவெல்ல,காலி	091-2234051 091-2225985	காலி
05	யாழ்ப்பாணம் தொழில் நுட்பவியல்கல்லூரி	பிறவுண்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.	021-2220028 021-2212403	யாழ்ப்பாணம்
06	கண்டி தொழில்நுட்பவியல் கல்லூரி	அறுப்பொல, கண்டி	081-2224063 081-2211810	கண்டி
07	குருநாகல் தொழில்நுட்பவியல் கல்லூரி	புத்தளம் வீதி, குருநாகல்.	037-2223264	குருநாகல்
08	இலங்கை தொழில்நுட்பவியல் கல்லூரி	ஒல்கொட் மாவத்தை, கொழும்பு- 10.	011-2440352 011-2324177	கொழும்பு
09	இரத்தினபுரி தொழில் நுட்பவியல் கல்லூரி	பாம் தோட்டம், கொழும்பு வீதி, இரத்தினபுரி.	045-2232390 045-2224715	இரத்தினபுரி
10	அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரி	பிரதான வீதி, அக்கரைப்பற்று	067-2279326 067-2279865	அம்பாறை

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

தொடர் இல.	*தொழில்நுட்பவியல் கல்லூரிகள் /தொழில்நுட்பக் கல்லூரிகள்*	*விலாசம்*	*தொலைபேசி இலக்கம்*	*மாவட்டம்*
11	ஆணமடுவ தொழில்நுட்பக் கல்லூரி	நவகத்தேகம பூமி, ஆணமடுவ	032-2263288 032-2263299 032-2263163	புத்தளம்
12	பலப்பிட்டி தொழில்நுட்பக் கல்லூரி	புகையிரத நிலைய வீதி, வந்ததுவ, பலப்பிட்டி	091-2258096	காலி
13	பண்டாரவளை தொழில் நுட்பக் கல்லூரி	வெவதென்ன, பண்டாரவளை	057-2222753 057-2233754	பதுளை
14	மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரி	பிரதான வீதி மஞ்சந்தொடுவாய், மட்டக்களப்பு	065-2246557 065-2248366 065-2248727	மட்டக்களப்பு
15	பெலியத்த தொழில்நுட்பக் கல்லூரி	புவக்தண்டாவ, பெலியத்த.	047-2243229 047-2251255	அம்பாந்தோட்டை
16	தம்புள்ளை தொழில்நுட்பக் கல்லூரி	மாத்தளை வீதி, தம்புள்ளை	066-2284713 066-2284885	மாத்தளை
17	தெஹியத்தகண்டி தொழில்நுட்பக் கல்லூரி	மகவனாவெல, தெஹியத்தகண்டி	027-2250117 027-2250262	அம்பாறை
18	எம்பிலிப்பிட்டி தொழில் நுட்பக் கல்லூரி	நோனாகம வீதி, எம்பிலிப்பிட்டி	047-2261037 047-2261608	இரத்தினபுரி
19	கம்பஹா தொழில்நுட்பக் கல்லூரி	வெரல்லவத்தை, யக்கல	033-2229711 033-2222132 033-2233253	கம்பஹா
20	ஹசலக தொழில்நுட்பக் கல்லூரி	யோத எல வீதி, ஹசலக	055-2257129 055-2258950	கண்டி
21	ஹோமாகம தொழில்நுட்பக் கல்லூரி	கொடகம, ஹோமாகம	011-2855315 011-2857133	கொழும்பு
22	களுத்தறை தொழில்நுட்பக் கல்லூரி	கலமுல்லை, களுத்தறை	034-2227804 034-2222325 034-2236622	களுத்தறை
23	கேகாலை தொழில்நுட்பக் கல்லூரி	கச்சேரி வீதி, கேகாலை.	035-2222441 035-2223319	கேகாலை
24	குளியாப்பிட்டி தொழில்நுட்பக் கல்லூரி	பன்னல வீதி, குளியாப்பிட்டி	037-2281323 037-2281271	குருநாகல்
25	மன்னார் தொழில்நுட்பக் கல்லூரி	பன்னை, வெட்டுவான் சந்தி, மடு வீதி	023-3238532	மன்னார்

Gazette.lk AMBITIONS REALIZED
SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

தொடர் இல.	*தொழில்நுட்பவியல் கல்லூரிகள் /தொழில்நுட்பக் கல்லூரிகள்*	*விலாசம்*	*தொலைபேசி இலக்கம்*	*மாவட்டம்*
26	மாத்தளை தொழில்நுட்பக் கல்லூரி	எம்.சீ. வீதி, மாத்தளை	066-2224196 066-2224847	மாத்தளை
27	மாத்தறை தொழில்நுட்பக் கல்லூரி	மெத்தெவத்தை, மாத்தறை	041-2222565	மாத்தறை
28	மெதகம தொழில்நுட்பக் கல்லூரி	பிபிலே வீதி, மெதகம	055-2266113 055-2266213	மொனராகல
29	மொனராகல தொழில்நுட்பக் கல்லூரி	சிரிகல, மொனராகல	055-2276167 055-2277448	மொனராகல
30	நுவரெலியா தொழில்நுட்பக் கல்லூரி	ஜயதிலக்க மாவத்தை, நுவரெலியா	052-2222658 052-2235895	நுவரெலியா
31	பாத்ததும்பறை தொழில்நுட்பக் கல்லூரி	நவயாலதென்ன, கடுகஸ்தோட்டை	081-2499782 081-2499024 081-2500441	கண்டி
32	பொலன்னறுவை தொழில்நுட்பக் கல்லூரி	வித்தியாபுர, பொலன்னறுவை	027-2224429 027-2224428	பொலன்னறுவை
33	இரத்மலானை தொழில்நுட்பக் கல்லூரி	காலி வீதி, இரத்மலானை	011-2632778 011-2626955	கொழும்பு
34	சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரி	அம்பாறை வீதி, சம்மாந்துறை	067-2260933 067-2051105 067-3133673	அம்பாறை
35	திருகோணமலை தொழில்நுட்பக் கல்லூரி	மிகிந்தபுர, திருகோணமலை	026-2223034 026-2051513 026-2227956	திருகோணமலை
36	வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி	மன்னார் வீதி, நெல்லுக் குளம், வவுனியா	024-2223664 024-2226720	வவுனியா
37	வறக்காப்பொல தொழில்நுட்பக் கல்லூரி	அங்குருவெல்ல வீதி, வறக்காப்பொல.	035-2267651 035-2268302	கேகாலை
38	வாரியப்பொல தொழில்நுட்பக் கல்லூரி	சிலாபம் வீதி, வாரியப்பொல	037-2267256	குருநாகல்
39	வீரவில தொழில்நுட்பக் கல்லூரி	புதிய நகரம், வீரவில	047-2237064 047-2237032	அம்பாந் தோட்டை

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED